**OS. 8/2015**

**நாள். 24.03.2026**

**பி.வா.சா.1 – நூருல்அமீன்**

<u>வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

நான் குடும்பத்தோடு 2010ம் ஆண்டுவரை சென்னையில் வசித்து வந்தேன் என்றால் சரியல்ல, தனியாக வசித்து வந்தேன். என் தகப்பனார் 2010ம் ஆண்டு இறந்துவிட்டார் என்றால் சரிதான். என் தகப்பனார் இறந்த பிறகு என் தாயாரை நான் என் பராமரிப்பில் வைத்திருந்தேன் என்றால் சரிதான். என் தாயாருக்கு உடல்நல குறைபாடுகள் ஏற்பட்டு சுயநினைவு இழந்து இறந்துபோனார் என்றால் சுயநினைவை இழக்கவில்லை, ஆனால் உடல்நல குறைவால் இறந்துபோனார். நான் தற்போது தாக்கல் செய்துள்ள கூடுதல் நிரூபண வாக்குமூலத்தில் 17.05.2010ம் தேதியிட்ட இனாம்பத்திரம் காணாமல்போய்விட்டது என சொல்லியுள்ளேன் என்றால் இல்லை. அந்த அசல் ஆவணம் எங்கு உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். என் தகப்பனார் பெட்ரோல் பல்க் ஆரம்பிக்கும்போது தாவா 1ம் இலக்க சொத்துக்கு சம்மந்தப்பட்ட 17.05.2010ம் தேதியிட்ட இனாம்பத்திரத்தின் அசல் ஆவணத்தை இந்தியன் ஆயில் கார்பரேசனிடம் என் தகப்பனாரும், சகோதரர் உமர்பாரூக்கும் கொடுத்துள்ளனர் என்றால் சரியல்ல. அந்த பெட்ரோல் பங்க் நடத்துவதற்காக செக்யூரிட்டிக்காக 30.07.1968 தேதியிட்ட கிரைய ஆவணத்தின் அசலை என் தகப்பனார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. தாவா 3ம் இலக்க சொத்தில் உள்ள வீட்டிற்கான ஆவணம்தான் 30.07.1968 தேதியிட்ட கிரைய ஆவணம் என்றால் சரிதான். 30.07.1968 தேதியிட்ட கிரைய ஆவணம் நீங்கலாக வழக்கு 3ம் அயிட்ட சொத்துக்கு மேலும் இரண்டு கிரைய ஆவணங்கள் என் தகப்பனார் பெயரில் உள்ளது என்றால் சரியல்ல. நான் வெகுகாலம் சென்னையில் இருந்து வந்ததால் மேற்சொன்ன ஆவணங்கள் பற்றி எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதி ஷாஜகான்

தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை படித்துப்பார்த்தேனா என்றால் இல்லை. 3ம் பிரதிவாதி தனது எதிர்வழக்குரையில் என் தாயார் சுயநினைவு இல்லாத நேரத்தில்தான் நான் உயில் ஆவணம் எழுதி வாங்கிக்கொண்டேன் என்று சொல்லியுள்ளார் என்றால் தெரியாது. 5ம் பிரதிவாதி கில்மி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை படித்துப்பார்த்தேனா என்றால் இல்லை. அவர் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் 1ம் இலக்க சொத்தில் உள்ள பெட்ரோல் பல்கில் இருந்து கிடைக்கும் வருமானத்திலும், ஏடிஎம் வாடகை வருமானத்தையும் நான் மட்டுமே அபகரித்துக்கொண்டதாக சொல்லியுள்ளார் என்றால் தெரியாது. வாதிகள் தாக்கல் செய்துள்ள பிராதை படித்துப்பார்த்தேனா என்றால் பார்த்தேன். பிராதில் பக்கம் 3ல் 3வது பத்தியில் 4வது வரியில் கூட்டாக வாதிகளும், பிரதிவாதிகளும் தொடர்ந்து தாவா சொத்துக்களை அனுபவம்செய்து வருகிறார்கள் என்று சொல்லியுள்ளார்கள் என்றால் சரிதான். பிராதில் பத்தி 4ல் பெண்மக்களாகிய வாதிகளுக்கு தலா 1 பங்கும், ஆண்மக்களாக பிரதிவாதிகளுக்கு தலா 2 பங்கும் இஸ்லாமிய சட்டப்படி பங்கு பாத்தியங்கள் சித்தித்திருக்கின்றன என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். 07.04.2016ம் தேதி நான் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை பத்தி 3ல் பிராது பாரா 2, 3 ல் கண்டுள்ள விவரங்களை ஒப்புக்கொண்டுள்ளேன் என்றால் தெரியாது. என்னுடைய எதிர்வழக்குரையில் தாவா 1ம் இலக்க சொத்தை பொறுத்து என் தாயார் கொடை ஆவணமாக எழுதிக்கொடுத்துள்ளார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என்னுடைய எதிர்வழக்குரையில் கொடை ஆவணம் எப்போது, யார் முன்னிலையில் எழுதிக்கொடுத்தார் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். நான் 07.04.2016ம் தேதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் தாவா 1ம் இலக்க சொத்து எனக்கு கொடை ஆவணம் மூலம் பாத்தியப்பட்டது என கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள கூடுதல் எதிர்உரையில் தாவா 1ம் இலக்க சொத்து என் தாயார்

எனக்கு எழுதிக்கொடுத்த உயில் ஆவணம் மூலம் பாத்தியம் என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் ஒருசமயத்தில் கொடை ஆவணம் மூலமாகவும் மற்றொரு சமயத்தில் உயில் மூலம் பாத்தியம் என முன்னுக்குபின் முரணாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா 1ம் இலக்க சொத்தில உள்ள பெட்ரோல் பல்க் நடத்துவதற்கு இந்தியம் ஆயில் கார்ப்பரேசனிடம் என் தகப்பனார் என்னென்ன ஆவணங்கள் செக்யூரிட்டியாக கொடுத்தார் என்பது தெரியாது என்றால் தெரியும். என்னென்ன ஆவணங்கள் கொடுத்துள்ளார் என்றால் 1ம் இலக்க சொத்துக்குரிய அசல் ஆவணங்கள் மற்றும் செக்யூரிட்டி டெபாசிட் மற்றும் வருவாய் ஆவணங்கள் கொடுத்துள்ளார். 1ம் இலக்க சொத்திற்குரிய ஆவணங்கள் இந்தியன் ஆயில் கார்பரேசனிடம் உள்ளது என்பதை தெரிந்து கொண்டே நான் என்னுடைய கூடுதல் நிரூபண வாக்குமூலத்தில் 17.05.2010ம் தேதியிட்ட இனாம் ஆவணத்தின் அசல் காணவில்லை என பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் வாதிகளுக்கு தலா ஒருபங்கும், ஆண்மக்களான பிரதிவாதிகளுக்கு தலா 2 பங்கும் பங்கு பாத்தியங்கள் உள்ளது என்றால் சரியல்ல, நாங்கள் உள்ளூரில் வைத்து சொத்து குறித்து பேசும்போது, எங்களுக்கு பணம் கொடுங்கள் என்று பணத்தை வாங்கிக்கொண்டு வாதிகள் விலகிக்கொண்டார்கள். பணம் வாங்கிக்கொண்டு சொத்துக்களில் பங்குபாத்தியம் தேவையில்லை என வாதிகள் சொன்னதாக சொல்வதற்கு ஆவணம் எழுதப்பட்டதா என்றால் இல்லை. யார்யாருக்கு எவ்வளவு பணம் கொடுப்பதாக பேசப்பட்டது என்றால் அனைவருக்கும் சேர்த்து ரூ.28 இலட்சம் கொடுப்பதாக பேசப்பட்டு ரூ.25 இலட்சம் ரொக்கமாகவும், ரூ.3 இலட்சம் காசோலையாகவும் கொடுக்கப்பட்டது. அந்த ரூ.25 இலட்சத்தை நான் மட்டும் கொடுத்தேனா அல்லது என் சகோதரர்களும் சேர்ந்து கொடுத்தார்களா என்றால் ஷாஜகான் தவிர மற்ற சகோதரர்கள் அனைவரும் சேர்ந்து கொடுத்தோம். ரூ.28 இலட்சம் நாங்கள் கொடுத்தோம் என எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்றால்

சரியல்ல. கூடுதல் எதிர் வழக்குரையில்தான் நான் பணம் கொடுத்தது சம்மந்தமாகவும், உயில் சம்மந்தமாகவும் பின்யோசனையிட்டு சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. என் மற்ற சகோதரர்கள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் பெண்மக்களுக்கு பங்கு பாத்தியத்திற்காக ரூ.28 இலட்சம் கொடுத்ததாக சொல்லவில்லை என்றால் அவர்கள் வாதிகள் பக்கம் இருந்ததால் சொல்லவில்லை. தாவா சொத்துக்களில் வாதிகளுக்கு பங்குபாத்தியம் இருப்பதாக நானும், என் சகோதரர்களும் எதிர்வழக்குரையில் ஒப்புக்கொண்டுவிட்டு தற்போது பங்குகள் கொடுக்கக்கூடாது என்பதற்காக பொய்யாக நகைகளும், பணமும் கொடுத்ததாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.